ஓ. எம். சுப்பிரமணியன்

Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-6 / பர்மா, மலேயா, 0-1-6 (9-காசு)

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 20 } ஈரோடு 7-12-1946 கார்த்திகைமீ 22உ { மலர் 9

## தத்துவ விளக்கம்

### சேலம் காலேஜில் பெரியார் பேச்சு

(சென்றவாரத் தொடர்ச்சி)

"கடவுள், மதம் என்பவைபற்றியத் தத்துவ விளக்கம் என்பதாக இதுவரை சிறிது, சிறிது பேசினேன். அவை பெரிதும் உங்களுக்கு மலைப்பைக் கொடுக்கக்கூடியதாக இருக்கலாம். சில உங்களுக்கு முரண்பட்ட கருத்துகளாக இருக்கலாம்.

உலகமக்களால் மிகமிக முக்கியமான தாகவும், மிகவும் உண்மைபோன்றதாகவும், மிகவும் தேவைப்பட்டது போன்றதாகவும் பேசியும், நம்பியும், செல்வாக்குப் பெற்றும் இருக்கும் இந்தச் சாதனங்கள் இவ்வளவு மலைப்பும் முரணும் உள்ளதாக இருப்பானேன்? இப்படிப்பட்ட நிலை மற்ற அறிஞர்களுக்கு எட்டாமல் இருப்பானேன? இந்த மலைப்பான கருத்தையும், முரணான தன்மையையும் பலமான பிரசாரத்தின்மூலம் பொறுப்புள்ளவர்கள் மக்களுக்குள் செலுத்துவானேன்? இதன் அவசியம் என்ன? பலன் என்ன? என்பன போன்ற கேள்விகள் எழலாம்.

இவைகளை எல்லாம் விட மதத் தலைவர்கள் என்பவர்களானவ சுவாமி முகமதுநபி போன்ற சாமர்த்தியமில்லாதவர்களும், பல கஷ்டநஷ்டமடைந்தவர்களுமான பெரியோர்கள் கூட இதெல்லாம் அறியாமல் இருந்திருப்பார்களா? என்பதும் ஒரு முக்கியப் பிரச்சினையாகும். எனவே முதலில் அதைப்பற்றிச் சிந்திப்போம்.

தோழர்களே! கடவுள் எவ்வளவு சர்வ சக்தியுள்ளவராகவும், சர்வ வியாபகமுள்ளவராகவும், சர்வ ஞானமுள்ளவராகவும், சர்வத்தையும் நடத்துபவராகவும், இருந்தாலும் மனிதன் கடவுளை நேரடிக்காண அறியமுடியவில்லை மற்றவர்களால் சொல்லிக் கொடுக்கப்படவும், காட்டிக்கொடுக்கப் படவுமே வேண்டியவராகிறார். அது போலவே மதமும் தானாக உதயமாகாமல் மற்றவரால் கற்பிக்கப்பட்டு நிபந்தனையினால் நிர்ப்பந்தத்தினால் அறிவுறுத்தலால் மனிதன் மதப்படி நடத்தப்படவேண்டியனாகிறான். இதிலிருந்து கடவுளும் மதமும் மயக்கமும் முரணும் உடையதாக இருக்கிறது என்பது மாத்திரமல்லாமல் மற்றவர்களால் காட்டிக்கொடுக்கவேண்டியதும் கற்பிக்கப்பட வேண்டியதும் நடத்தப்படவேண்டியதும், அதற்கும் பிரசார முயற்சியும், பாதுகாப்பு நிர்ப்பந்தமும்வேண்டி இருக்கிறது என்பது ஒரு அளவுக்காவது விளங்குகிறது. இப்படிப்பட்ட காரியங்களில் பிரவேசித்து இருக்கும் பெரியோர்கள்செய்த செய்கிற காரியங்களை அடியோடு நாம் குற்றம் சொல்லிவிடமுடியுமா? அல்லது அப்படிப்பட்டவர்கள் அத்தனைபேருடையக் காரியத்திலும் நாம் சந்தேகப்படமுடியுமா? அவர்களது முயற்சியில் (ஏசு, முகம்மது முதலாகிய) சில பேருடைய முயற்சியாவது, அவற்றுள் சிலவாவது நல்லெண்ணமுடையவைகளாய் இருக்காதா? எல்லோரும் மூடநம்பிக்கைக்கொண்டவர் அல்லது மக்களை வேண்டுமென்றே மயக்கத்தில் ஆழ்த்தி தன்னலம்பெறுகின்றவர் என்று ஒரேயடியாய் முடிவுகட்டிவிடமுடியுமா? என்பவைகளைப்பற்றிச் சிந்திக்க வேண்டும்.

இந்த இடத்தில் நாம் மூடநம்பிக்கைக்காரர்களையும் சுயநலக்காரர்களையும் விட்டுவிட்டு உண்மையாகவே விஷயமுணர்ந்த நல்லெண்ணமுள்ள பொதுநலத்துக்குப் பாடுபட்டு தன்னலத்தைவிட்டு, துன்பமும் அநுபவித்துக்கொண்டு, கடவுளையும் மதத்தையும் மக்களுக்குக் காட்டிக்கொடுத்த பெரியோர்களை உண்மைப் பெரியோர்களாகக் கருதிக்கொண்டே அதன் காரணங்களைச் சிந்திப்போம்.

கடவுளும், மதமும் இன்று மனிதனைத் தவிர மற்ற ஜீவன்களைப் பொருத்தவரை தேவையில்லை என்பது மாத்திரமல்லாமல் அவைகளுக்காகக் கற்பிக்கப் பட்டிருக்கவும் இல்லை, பிரசாரம் செய்யப்படுவதுமில்லை. ஆனால் இயற்கையிலேயே பகுத்தறிவு இருக்கிற, இயற்கையிலேயே அரிய விஷயங்களை உணரும் சக்தி இருக்கிற மனிதவர்க்கத்துக்குத்தான் கடவுள் மதம் கற்பித்துப் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. இதிலிருந்து என்ன தெரிகிறது? மனித வர்க்கத்தின் நல்வாழ்வுக்கு இப்படிப்பட்ட சாதனங்கள் தேவைப்படுகின்றன என்பது தெரிகிறது. ஏனென்றால் மனிதன் கூடிவாழும் ஒரு சமுதாயப் பிராணியாய் இருக்கிறான். பொதுவாகவே ஜீவன்களுடைய உணர்ச்சியும், குணமும் சுயநலம் அதாவது தன்னைப் பொறுத்த நலனை, தேவையைக் கவனித்துக்கொள்ளுகிறதும், கவலைப்படுகிறதும் இயற்கை என்பதல்லாமல் மற்றபடி பிறர் சவுகரியத்தைப் பார்ப்பது என்பது இயற்கைக்கு மாறுபட்டதாகும்; கட்டுப்படாததாகும்.

மனிதனுக்கு மற்றப் பிராணிகளை விட அதிகமான அறிவு இருப்பதால், அந்த அறிவு ஜீவனின் இயற்கை உணர்ச்சியின் சுயநலத்தைமாத்திரமே

கவனிப்பதில் சென்று அது விரியும் போது சமுதாயத்தில் உள்ள மற்ற மனிதனுக்கும், சில ஜீவன்களுக்கும் தொல்லை உண்டாக்கக் கூடியதாய் ஏற்பட்டுவிட்டால் அது சமுதாயத்திற்குக் கேட்டை விளைவிக்கும், நலன் விளையாது என்பதாக எல்லாம் கருதி அதற்குப் பரிகாரமாகக் கடவுள் மதம் வேண்டப்பட்டதாக ஆகிவிட்டன என்னலாம்.

தனியே சுயேச்சையாகக் காட்டில் திரிகின்ற மனிதனுக்குக் கடவுளும் மதமும் தேவையே இல்லை. காட்டுவாசி மனிதனுக்கு இயற்கை நடப்பும் இயற்கை அநுபவமுமே "கடவுளும் மதமும்" ஆகும். ஏனெனில் அவன் இயற்கையோடு வாழுகின்றான். ஆனால் நாட்டுவாசியான (சமுதாய வாழ்வில் ஈடுபட்ட) மனிதனை ஒவ்வொரு துறையிலும் இயற்கைக்கு மாறாகவே வாழும்படியாகச் சமுதாயம் செய்துவிட்டது. இயற்கைக்கு மாறாக வாழ்ந்தால்தான் இன்றைய சமுதாய வாழ்வு நிலைக்கும், இல்லாவிட்டால் மிருகப்பிராணி ஜீவவாழ்வாகத்தான் ஆகிவிடும்.

ஆகவே மனிதனை இயற்கைக்கு விரோதமாக "நல்" வாழ்வு வாழச் செய்வதற்குப் பொதுவான அமைப்பில் கவலையுள்ள அறிஞர்களான பெரியோர்கள் கடவுள் மதம் ஆகியவற்றைக் கற்பித்துப் பிரச்சாரம் செய்துவருகிறார்கள்.

இதைத் தெளிவுபடுத்தவேண்டுமானால் ஒன்று சொல்லுகிறேன். மனிதனுக்கு அரசன் அல்லது சர்க்கார், சட்டம், தண்டனை ஆகியவை எதற்காகக் கற்பிக்கப்பட்டு அமல் நடத்தப்பட்டுவருகின்றன? என்பதைச் சிந்தித்துப்பாருங்கள்.

இன்றைய தினம் மனிதச் சமுதாயத்திற்கு ஒன்றுகூடி வாழ்வதற்கு அரசனும் சட்டமும் தண்டனையும் இல்லாவிட்டால் பாதுகாப்போ, சாந்தியோ, சமாதானமோ சிறிதளவது இருக்கமுடியுமா? நாம் யாவரும் இன்று இந்த அளவுக்காவது வாழ்வது அரசாங்கம், சட்டம், தண்டனை ஆகியவைகளின் பாதுகாப்பாலேயே ஆகும். மனிதச் சமுதாய கூட்டுவாழ்வுக்கு இவை போதுமென்றாலும் ஒரு அளவுக்குத்தான் போதுமானதாகும். அரசாங்கத்தாலும், சட்டத்தாலும் மனிதனை மற்ற மக்களுக்கு நன்மையாகவும் தொல்லை இல்லாமலும் நடந்துகொள்ளும்படிச் செய்வது என்பது முழுவதற்கும் சாத்தியப்படாத காரியமாகும். சில காரியங்களைச் சட்டத்தால் செய்துவிடமுடியாது. மக்களோடு மக்கள் அன்பாய் நடக்கவேண்டும், ஒருவருக்கொருவர் உதவி, உபகாரம் செய்யவேண்டும்; சமுதாயக்கட்டு, ஒழுக்கம், பச்சாதாபம், நாணயம், நன்றி, நம்பிக்கை முதலியவை மக்களிடையில் பழக்கத்தில் இருக்கவேண்டும், நலம் செய்ய முந்தவேண்டும், நல்லதை எண்ணவேண்டும், கெடுதியை எதிர்க்கவேண்டும். பாதுகாப்பு இல்லாத சமயத்திலும் பிறர் பொருளைக் கவராமல் தூய்மையாய் நடந்துகொள்ளவேண்டும்.

குறிப்பு:- இந்த இடத்தில் நான் ஒழுக்கம் நலம் என்பதெல்லாம் இன்றைய சமுதாயக் கொள்கையில் இருந்துவருவதையேயாகும். எப்போதும் எங்கும் இவையே ஒழுக்கம் நலம் ஆகிவிடாது.

இப்படியான இன்னும் பல காரியங்கள் சட்டத்தின்மூலம் கட்டுப்படுத்த முடியாதவை இருக்கின்றன. சுருக்கமாகச் சொன்னால் மனிதச் சுபாவம் இயற்கைச் சுதந்திரத்தோடு இருந்தால் ஒழுக்கமாகவோ பிறருக்குத் தொல்லை இல்லாமலோ இருக்க முடியாததாகும். நிபந்தனையும் நிர்ப்பந்தமும் மனிதனுக்கு மிகமிக அவசியமானதாகும். ஆதலால் அப்படிப்பட்ட நிர்ப்பந்தம் நிபந்தனைகள் அவ்வளவும் சட்டத்தால் செய்யமுடியாததாலேயே மனிதனுக்குப் பயத்தை ஊட்டி நேர்ப்பாதையில் செலுத்த கடவுள் மதம் ஆகிய நம்பிக்கை அவசியம் செய்யவேண்டியதாயிற்று.

தத்துவ விளக்கப்படிச் சொல்ல வேண்டுமானால் கடவுளும் மதமும் மனிதனை இன்னபடி நினைக்க வேண்டும் இன்னபடி நடக்கவேண்டும். இல்லாவிட்டால (ஏதோ ஒரு மாதிரியான) தண்டனை, கேடு வரும் என்று பயப்படுத்தி வைத்திருப்பதற்கு அல்லாமல்- பயப்படும்படி செய்வதல்லாமல் வேறு எதற்குப் பயன் படுத்தப்படுகிறது? மற்றும் எதாவது சொல்லவேண்டுமானால் மனிதன் இன்னபடி நினைத்து, இன்னபடி நடந்தால் இன்ன இன்ன மாதிரியான நலம் மோட்சம் கிடைக்கும் என்ற பேராசையை அதாவது தகுதிக்கும் இயற்கைக்கும் மேற்பட்ட லாபம் கிடைக்குமென்ற ஆசையை மூட்டுவதற்கல்லாமல் வேறு எதற்குப் பயன்படுகிறது? ஆகவே இந்த இரண்டு காரியமும் அதாவது கேடு வரும் என்கின்ற பயமும், நலம் ஏற்படும் என்கின்ற பேராசையும் இந்தச் சமுதாய வாழ்வுக்கு அரசன், சட்டம், தண்டனை ஆகியவற்றால் செய்ய

(தொடர்ச்சி 7-பக்கம்)

இலவச சிகிச்சை இலவச சிகிச்சை

அடியிற்கண்ட வியாதிகளுக்கு நேரில் பூரா
இலவச சிகிச்சை

வி. பி. மூலம் விரும்புவோருக்கு:-

இளம்பிள்ளை வாதம் பாரிசவாயு, குஷ்டம், யானைக்காலுக்கு (தாம்பரக்குளிகை) எல்-லேப்ரோ ரு. 5-0-0

வெட்டை, ஆஸ்த்மா, இருமல் மற்றும் உஷ்ண ரோகங்களுக்கு கிளாப்போ ரு. 3-0-0

போக சக்திக்கு (இரு பாலருக்கும்) மாதவிடாய் கோளாறு, ரத்தக்குறைவு முதலியவைகளுக்கு பிளாட்டோ ரு 3-0-0

சகல பல் வியாதிகளையும் போக்கி, பல் ஆட்டத்தையும்
உறுதிப்படுத்தும் ஸ்ரீ கிருஷ்ணா டென்டல் பாம்
முதல் தரம் அணா 8. இரண்டாந்தரம் அணா 4.
(30-வருஷ அனுபவம்)

Dr. M. R. ராஜகோபாலன் L. I. M. B. cl.,
தேசீ தர்ம வைத்தியசாலை, மன்னார்குடி (P. O.) S. I. R.

# “ஸ்ட்ரைக்” எதற்கு?

## தொழிலாளிக்கும் காங்கரஸ்காரனுக்கும் உரையாடல்

(“சித்திராபுத்திரன்”)

தொழிலாளி:- காங்கரஸ் ராஜ்யம் வந்தவுடன் தரித்திரம் பிடிங்கிட்டு திங்கிறதப்பா? அது மந்திரமா? சம்பளம் பத்தாது என்று கேட்டால் அடி உதை சுடு வெட்டு குத்து, தாராளமாய்க் கிடைக்குதப்பா? இந்த வருட சங்கராந்தி, தொழிலாளிகள் மேல் தான் வந்துவிட்டதுபோல் இருக்கிறது. எல்லாம் கடவுள் செயல்தான்.

காங்கரஸ்காரன்:- கடவுள் செயல் என்ன, வெங்காயம் என்ன? இப்ப உனக்கு என்னப்பா குறை.

தொழி:- குறை எதிலே இல்லை? அடி உதை தான் தாராளம். டிஸ்மிஸ் சஸ்பெண்டுதான் தாராளம். மற்றபடி எதிலே சவுக்கியமய்யா.

காங்:- எம்பா புளுகிறே, மனசார பொய்ப் பேசுறே. இப்பத்தான் உங்கக் கிட்ட காசு பணம் விளையாடுதே.

தொழி:- எங்கப்பா விளையாடுது? என் வயித்தெரிச்சலைக் கிளப்புறே பேசாமெப் போய்யா.

காங்:- தொழிலாளிகளுக்குப் புத்தி இல்லேண்ணு பிரதம மந்திரி சொன்னது சரியாய்ப் போச்சு. உங்கிட்ட காசுப் பணம் விளையாடாதப்போ யாருகிட்ட விளையாடுது?

தொழி:-ஏய்யா அக்கிரமம்பேசறே? இதுதான் காங்கிரஸ்காரனின் யோக்கியதையோ?

காங்:- நானா அக்கிரமம்பேசறேன் நான் சொல்லறதைக் கேள். அரிசி பணம் அரைவாசி மிச்சமாய்ப் போய்விட்டது. துணிப் பணம் அரைவாசி மிச்சம். இனி இந்தப்பணம் உங்கக் கையிலே விளையாட வேண்டியதுதானே.

தொழி:- எங்கே அய்யா மிச்சம்?

காங்:- அடச் சனியனே நான் சொல்றேன் கேளு. முன்னே 16-அவுன்ச அரிசி குடுத்தாங்கோ, இப்ப 8-அவுன்சுதானே குடுக்குறாங்கோ.

முன்னே 12-கஜம் 10-கஜம் துணி குடுத்தாங்கோ இப்போ 5-கஜம் தானே குடுக்குறாங்க. ஆகவே எட்டு அவுன்ஸ் அரிசிப் பணம், 5, 6 கஜம் துணிப்பணம் உங்களுக்கு மிச்சம் தானே; இந்தப்பணம் விளையாட வேண்டியதுதானே.

அரிசி, துணிச் செலவு பார்த்துக் கணக்குப்போட்டு அடுத்த சம்பளத்திலே குறைச்சடப் போறாங்கோ! வீண் கூச்சல் போடாதே!

தொழி:- ஏய்யா இதுதானா யோக்கியதை?

காங்:- நீதான் சொல்லே, உனக்குப் பணம், சம்பளஉயர்வு எதுக்கு? செலவு அதிகமாய்ப் போய்ட்டது இண்ணு தானே? அதுதான் எங்கப் பிரதமர் செலவைக் குறைச்சப்போட்டாரே அப்பறமும் சம்பளம் கேக்கறதும் ஸ்ட்ரைக்கு பண்ணறதும் குறும்பு தானே?

தொழி:- ஓஹோ இப்பத்தான் புரிஞ்சது- அப்படின்னா மந்திரிகளும் சம்பளத்தைக் குறைச்சிக்கவாங்க இண்ணுச் சொல்லு. சரிசரி, அவங்க 1500 ரூபாய் சம்பளம் இனி 500 ரூபாய் ஆயிபோடும்ணுச் சொல்லு.

காங்:- இதுதானே அதிகப் பிரசங்கித்தனம். மந்திரிகளுக்கு 8 அவுன்ஸ் ரேஷனா? 5 கஜம் துணி கூடவா? அவங்களுக்குத்தான் முன்னேயைவிட இப்ப ரேஷன் பறக்குதே, அவங்க என் குறைச்சுக்கவாங்க? உனக்கு தலைச்சா அவங்களுக்கும் குறைக்கணுமோ! அப்படின்னா அதுக்கு மந்திரி வேலை என்னத்துக்கு? அவங்கச் சொந்தவேலையையே பாக்கமாட்டாங்களா? தேசத்துக்காகப் பாடுபட்டதாலே அவங்க இந்தப் பஞ்ச காலத்திலே இப்படி மூணு பங்குச் சம்பளத்தைத் திணுபட்டு அஜீரணத் தொல்லை அனுபவிக்கிறது. இதைத் தெரியாமே நீ அவங்க சம்பளத்திலெ கைவைக்கப் பாக்கிறே. அதுதான் பிரதமர் தொழிலாளிகளுக்குப் புத்தி இல்லேண்ணு சொன்னார். உங்களுக்கு மாத்திரமா? குமாஸ்தாக்களுக்குக்கூட இதுதான் பதில். குமாஸ்தாக்களுக்குத் துணி, அரிசிப் பணம் மிச்சமாயிட்டதோடு வீட்டு வாடகை கூட ஏத்தறதில்லேண்ணு வாடகைக் கட்டுப்பாடு சட்டம் வந்துட்டது. அப்புறம் குமாஸ்தாக்களுக்கு அதிகச் சம்பளம் என்னத்துக்கு?

ஆகவே நம்ம மந்திரி பஞ்சத்தையும், பணம் பத்தாமையையும் தடுக்க நல்ல திட்டம் போட்டுவிட்டார். இனியும் குறைசொன்னால் ஜனங்களுக்கு நன்றி இல்லேண்ணுதானே அர்த்தம்.

ஆனதனாலே இனிமேல் சம்பளம் பத்தாதுண்ணா யாரும் கேக்காதிங்கோ, மந்திரிக்கு, சர்க்காருக்குக் கணக்குத் தெரியாதுண்ணா ஏமாந்தாதிங்கோ, தெரியுமா?

கோயமுத்தூர் மில்லுத் தொழிலாளிகளுக்கும், சேலம் நெசவுத் தொழிலாளிகளுக்கும், அரிசி துணி ரேஷன் குறைத்ததுபோல் கள்ளுசாராயச் செலவும் (யாராவது செய்வதானால்) நிறுத்திவிட்டார்களே அப்பறம் அவங்களுக்குத்தான் என்ன குறை தெரிஞ்சுதா?

தொழி:- காங்காரசுக்காரனுக்குப் புத்தியுமில்லே, இருந்தாலும் நாணையமும் இல்லேங்கிறது சரியாய்ப்போச்சு

காங்:- என்னப்பா அப்படிச் சொல்றே?

தொழி:-சொல்றேன் கேளு, தொழிலாளியாகட்டும் வேறே யாராகட்டும் உங்க மந்திரி சொன்னாப்பலே அரைவாசி அரிசி, அரைவாசி துணியோடே யாரும் இருக்கிறதில்லை. கண்ட்ரோல்விலைக்கு இதைவாங்கிக் கிட்டு, பாக்கியை ஒண்ணுக்கு இரண்டு விலை கொடுத்து பிளாக் மார்க்கட்டில் வாங்கி உபயோகிக்கிறான் தெரியுமா? அதுக்குத்தான் பணம் பத்தலையே எண்ணு அடிச்சிக்கிறான். வெளியூருக்குப் போய்க்குடிச்சப்போட்டும் வந்துடறான்.

காங்:- பிளாக் மார்க்கட்டில் யார் விக்கிறாங்கோ? அவங்களுக்கு அரிசி துணி ஏது?

தொழி:- ஏதுண்ணா கேக்கறே? பெல்லாம் உங்க காங்காரசுக்காரர், கதர் காரர், ஆகஸ்டு தியாகி ஒண்ணாம் நெம்பர் வேஷ காங்கரஸ், ஒண்ணாம் நெம்பர் காலி காங்கரஸ், மற்றும் வியாபாரி காங்கரஸ், சட்டசபை காங்கரஸ், மந்திரிகளின் கூலிகள்,

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

குடி அரசு

1948-௵ டிசம்பர் ௴ 7௳

# மாப்பிள்ளை இல்லாத கல்யாணம்

இந்தியாவின் அரசியல் சுதந்திரம் என்பது ஒரு ஆபாசமான நிலையில், உலகம் சிரிக்கும்படியான கட்டத்தில் வந்து மாட்டிக்கொண்டது.

பிரிட்டிஷ்காரர்கள் காங்கரஸ்காரர்களை (ஆரியர்களை) வசப்படுத்திக்கொண்டு அவர்கள் விரும்பிய சுதந்திரம் கொடுத்துவிட்டதாக மக்கள் நம்பும்படிச் செய்துவிட்டுப் பிறகு தாங்களும் காங்கரஸ்காரர்களுமே (ஆரியர்களும்) ஆரியரல்லாத இந்நாட்டு மக்களை அழுத்தி வைத்துக்கொண்டும், இந்நாட்டு மக்கள் உழைப்பையும் செல்வத்தையும் எப்போதும் போல சுரண்டிக்கொண்டும், பங்கு போட்டுக்கொண்டு, முன்போலவே ஏகபோக ஆட்சி நடத்திக்கொண்டும் இருக்கலாம் என்று கருதினார்கள்.

காங்கரஸ்காரர்களும் அதற்கு இணங்கி பிரிட்டிஷாருடன் கூட்டுக் கொள்ளை ஒப்பந்தம் செய்துகொண்டு, தங்கள் காரியம் முடிந்துவிட்டதாகவே கருதி ஆனந்த பரவசத்திலிருந்தார்கள். ஆனால் இன்றைய நிலைமை அவர்கள் ஆனந்த பரவசத்தில் இடிவிழுந்தது போல் ஆகிவிட்டது.

ஆரியர்கள் தங்கள் கையில் ஏகபோக ஆதிக்கம் இருப்பதைத்தான் சுதந்திரமாகக் கருதுகிறார்களே ஒழிய பொதுமக்கள் கையில் சுதந்திரம் இருப்பதைச் சுதந்திரமாக அவர்கள் கருதுவதில்லை.

காங்கரசு என்றால் என்ன என்று முதலில் சிந்திப்போம். அது ஒரு சிறு சுயநல கோஷ்டியாரின் ஸ்தாபனமாகும். அது யாதொரு பொறுப்பும் கடமையும் இல்லாத காந்தியாரை வழிகாட்டியாகக் கொண்டதாகும். காந்தியார் அரசியல் ஞானமோ பகுத்தறிவுத்தன்மையோ அற்றவரும், கடவுள் மதம் புராணம் ஆகியவைகளின் பேரால் மக்களை ஏமாற்றிக்கொண்டு தன்னை மனிதத்தன்மைக்கு மேம்பட்ட ஜீவனாக விளம்பரம்செய்யச் செய்துகொண்டு, மக்களை ஆரியத்திற்கும், முதலாளித் தன்மைக்கும் அடிமையாக்கி வைத்துக்கொண்டு இருக்கும் வேலையில் இருப்பவர். இப்படிப்பட்ட காந்தியார் தனக்குக் "காங்கரசில் எவ்வித பொறுப்பும், சம்பந்தமும் இல்லை" யென்றும் தான் "பொதுவாகவே உலக மக்களுக்கு வழிகாட்டும் ஒரு தெய்விக அருள் பெற்ற சத்திய சொரூபி" என்றும், தான் செய்யும், சொல்லும் "எந்தக்காரியமும் கடவுள் இஷ்டப்படி, கட்டளைப்படிச் செய்யப்படுவதாகும்" என்றும் சதா சொல்லிக்கொண்டு இருப்பவர்.

காங்கரஸ் தலைவர்கள் என்பவர்களும், காங்கரஸ் தொண்டர்கள் என்பவர்களும், காங்கரஸ் அபிமானிகள் என்பவர்களும் தங்களுடைய எந்தக்கொள்கைக்கும், எந்தக் காரியத்திற்கும் பகுத்தறிவுப்படியான தேவையையோ, சமாதானத்தையோ, அல்லது அரசியல் தன்மையான காரணகாரியத்தையோ சொல்லாமல் எல்லாவற்றிற்கும் "மகாத்மா காந்தியார் கட்டளை இட்டுவிட்டார்", "மகாத்மா காந்தியார் விரும்புகிறார்" "அவர் அந்தப்படி அபிப்பிராயப்பட்டார்" என்பதாகச் சொல்லியே எந்தக் காரியத்தையும், செய்பவர்களாக, சாதித்துக்கொள்ளுபவர்களாக இருக்கிறவர்களாவார்கள். மக்களும் பெரிதும் மூடநம்பிக்கைக் காரணமாகப் பகுத்தறிவுகொண்டு ஆலோசிக்கும் தன்மை அற்றவர்களாகச் செய்யப்பட்டுவிட்டபடியால் அரசியல் என்றால் அல்லது காங்கரசு என்றால் ஒரு மதஸ்தாபனம் என்றும், காந்தியார் என்றால் ஒரு மதத்தலைவர் அல்லது மகான் என்றும் எண்ணிக்கொண்டு இருக்கிறார்களே தவிர அரசியல் என்பதைப்பற்றிய ஞானம் உணர்ந்தவர்களோ ஏதாவது ஒரு கருத்து கொண்டவர்களோ என்று சொல்லுவதற்கு இல்லாத நிலையில் இருக்கிறார்கள். அரசியல் என்பது விஞ்ஞானத்தை அடிப்படையாய்க் கொண்டது என்பதும், மதம் என்பது மூடநம்பிக்கையை அடிப்படையாய்க் கொண்டது என்பதும் காங்கரஸ்காரர்களுக்குத் தெரியவே தெரியாது.

காந்தியார்கொண்டு இருக்கும் அல்லது காந்தியாருக்கு ஏற்பட்டு இருக்கும் சிஷ்யர்கள் 4 பேர்களில் அதாவது நேரு, பட்டேல், ஆச்சாரியார், பிரசாத் என்பவர்களில் ஒருவருக்கொருவர் எந்தவிதக் காரியத்திலும் கருத்திலும் ஒருமனப்பட்டவர்கள் அல்லவென்றே சொல்லலாம். ஒருவரை ஒருவர் ஏய்த்துக்கொண்டிருப்பதாகவே கருதிக்கொண்டும் நடந்துகொண்டும் வருகிறார்கள். பண்டித நேரு அவர்கள் காந்தியாருக்குச் செல்லப்பிள்ளை என்கிற சலுகையில் மற்ற மூன்று சிஷ்யர்களால் மதிக்கப்படுகிறார் என்பதல்லாமல் மற்றபடி அவரை ஸ்ருதி(சுதி)க்குப் பயன்படாத வாத்தியக்கருவி, அதாவது ஒரு ஒலித்தப்பட்டை என்றே கருதி இருக்கிறார்கள். அவருடைய எந்தப் பேச்சுக்கும், கருத்துக்கும் மற்ற மூவரும் மதிப்புக் கொடுக்கமாட்

டார்கள் என்பதோடு அவருடைய எந்தக் கருத்தையும்பற்றி லட்சியமும் செய்யமாட்டார்கள். அதுபோலவே தோழர் பட்டேல் அவர்களையும் மற்ற மூவர்களும் ஒரு சத்தியமூர்த்தி அய்யருக்கு உண்டான யோக்கியதையிலேயே மதிப்பார்களே தவிர மற்றபடி வேறு எந்த வகையிலும் அதாவது நாணயத்தில் கூடஅவரை ஒரு கௌரவமான மதிப்புக்கு அருகராகக் கருதமாட்டார்கள். தோழர் ஆச்சாரி அவர்களைப்பற்றியும், மற்ற மூவரும் மிகுதியும் வெறுப்புக் கொண்டவர்களாவார்கள். ஆச்சாரியார் காந்தியாருடைய நன்றி அறிதலுக்கு உரியவராக இருந்துவருவதாலும், காந்தியாருக்குச் சம்பந்தியாராக இருப்பதாலும் இன்று அந்த கோஷ்டியில் அவருக்கு இடம் இருக்கிறது என்பதல்லாமல் அவரை அவருடைய தகுதிக்குத் திறமைக்குத் தக்கபடியாக மதிப்பவர் யாவருமில்லை என்பதோடு ஆச்சாரியாருடைய கருத்துக்கும் காங்கரசில் விலை இல்லை. தோழர் ராஜேந்திரப் பிரசாத் அவர்களுக்கு மற்ற மூவரும் பிடிக்காதவர்களாவார்கள். ஒருவரைப்பற்றி உளறுவாயர் என்றும், ஒருவரைப்பற்றி வீண் ஜம்பப்பேச்சும் நாணயக் குறைவும் கொண்டவர் என்றும், ஒருவரைப்பற்றி மிகவும் குயுக்திக்காரர் என்றும் கருதிக் கொண்டு தனது முடிவு நாளை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கும் ஒரு நோயாளி அவர்.

இந்த நால்வரில் ஒருவராவது "காந்தியம்" என்பதில் அதாவது "சத்தியம்", "அஹிம்சை," "ராட்டினம்," "கடவுள் நடத்துவது" என்பவை முதலிய கருத்துகளில் காரியங்களில் பற்றுதலோ நம்பிக்கையோ கொண்டவர்கள் அல்ல என்றே சொல்லலாம். இதுவரை காங்கரஸ் தலைவராயிருந்த சாயபுவான மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்களுக்கும் காந்தி சிஷ்டியர்களிடத்தில் இருந்த மதிப்பெல்லாம் "நாம் விளையாடுவதற்கு ஒரு முஸ்லிம் பொம்மை கிடைத்ததே" என்பதைத்தவிர அவருடைய திறமை, கருத்து, தொண்டு ஆகியவைகளில் எதுவும் சிறிதும் மதிப்புக்குரியதல்ல என்றே சொல்லலாம்; இப்போதைய காங்கரஸ் தலைவர் ஆச்சாரிய கிருபளானி என்பவர் கொஞ்சகாலத்துக்கு முன் வரையில் ஒரு கிராக், (பைத்தியம் அல்லது ஸ்குரு லூஸ்) என்று கருதப்பட்டுவந்தவர். தங்களுக்கு நம்பிக்கை இருப்பவராக ஒருவர் அந்தப் பதவியில் வேண்டும் என்பதற்காகக் காந்தியார் அவருக்குப் பட்டம் சூட்டச்செய்தார்.

ஆகவே "பரமார்த்த குருவும் நான்கு சிஷ்யர்களும்" என்கின்ற தன்மைபோல் இன்று காங்கரஸ் தலைமையும் இருந்து வருவதுடன் எந்தத் தேர்தலிலும் காங்கரசுக்கு வெற்றி ஏற்பட்டுவிடும் என்கின்ற நிலைமை நாட்டில் பிரிட்டிஷ் சலுகையாலும் தந்திரத்தாலும் பணத்தாலும் பிரச்சாரத்தாலும் உண்டாக்கப்பட்டுவிட்டதால் சுயநலக்காரர்களும், சமய சஞ்சீவிகளும், நீக்குப்போக்கற்ற வெறும் ஆசாமிகளும், போய் ஒண்டுகிற தன்மையைப்பெற்று அதுஒரு பலமான காலாடில்தாபனமாக விளங்குகிறது.

காங்கரசின் பிரதிநிதித்துவத் தன்மைக்கும் ஜனநாயகத் தன்மைக்கும் ஒரே ஒரு சிறு உதாரணம் பார்க்கலாம். அதாவது அரசியல் நிர்ணயசபைக்கு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுத்ததில் அவர்களின் உண்மையான நிலைமை நன்கு தெரிகிறது.

இன்ன இன்னார்தான் அபேட்சகராய் இருக்கவேண்டும், இன்ன இன்னார்தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், இன்ன இன்னார், இன்ன இன்னாருக்குத்தான் ஓட்டுச் செய்யவேண்டும் என்று கண்டிப்பான உத்திரவுபோட்டு, தவிர முடியாத ஏற்பாடுசெய்து, குறிப்பிட்டவர்களே "தேர்ந்தெடுக்கப் பட்டார்"களே தவிர பொதுமக்களுக்கு நிற்பதற்கு உரிமையோ, ஓட்டர்களுக்கு இஷ்டப்படி ஓட்டுசெய்யும் உரிமையோ இருந்து தேர்தல் நடக்கவில்லை. இந்த நிலைமையில் உள்ள காங்கரசுக்கு, இந்த நிலையில் தெரிந்தெடுக்கப்பட்ட "மெஜாரிட்டி" பிரதிநிதிகள் வசம் பிரிட்டிஷ்காரன் சுதந்தரத்தை ஒப்புவிக்க ஏற்பாடு செய்கிறான் என்றால் இதில் சூது பித்தலாட்டம், நாணயக் குறைவு இருக்காது என்று யார் தான் சொல்லமுடியும்?

இன்றைய அரசியல் பிரதிநிதி சபையானது பணக்காரன்பார்ப்பான், முதலாளி, ஜமீன்தாரன், மேல்ஜாதிக்காரன் என்பவர்களைக்கொண்டதாக இருக்கிறது என்று சொல்லுவதற்கு அல்லாமல் பொதுஜனங்களுக்குச் சம்பந்தம் ஏதாவது இருக்கிறது என்று சொல்ல முடியுமா? என்று சிந்திக்க வேண்டுகிறோம். பொதுஜனப் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்டு இன்று சட்டசபை மெம்பர்களாக இருக்கின்றவர்களே இந்த நாட்டு ஜனத்தொகையில் 100க்கு 10பேர்களான ஓட்டர்கள் கொண்ட தேர்தலில் அதுவும் அதிலும் பகுதிப்போரும் மூன்றிலொரு பங்கு போரும் தெரிந்தெடுக்கப்பட்டவர்களாவார்கள். இந்த சிறு எண்ணிக்கை மக்களால் தெரிந்தெடுக்கப் பட்டதாகப் பேர்செய்துகொண்டுவந்த சட்டசபை மெம்பர்களின் நடந்த அரசியல் நிர்ணயசபை தேர்தல் என்பது ஆள்ஒன்றுக்கு $3\frac{3}{4}$ பேர்களே "தலைவர்கள்"

சொன்னபடி ஓட்டுச்செய்து அதில் "தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்" ஆவார்கள். அதுவும் சுதந்திரமாய் இல்லாமல் நிர்ப்பந்தத்தில் ஓட்டுச்செய்யப்பட்டவர்கள். எனவே இந்தியச் சுதந்திர ஸ்தாபனமான காங்கிரசின் யோக்கியதையும், அதன் தலைவர்கள் யோக்கியதையும், அதன் பிரதிநிதித் தன்மையின் வண்டவாளமும் உண்மையாக அறிந்த எவர்தான் அவர் வைஸ்ராய் இருந்தால் காங்கிரசினிடம் மாத்திரமே சுதந்திரத்தை ஒப்புக்கொடுத்துவிட்டுப் போகப்போகிறோம் என்று சொல்லமுடியும்? காங்கிரசிடம் சுதந்திரம் கொடுப்பதாகச் சொல்லும் பிரிட்டிஷ் சர்க்கார் 60, 70 லட்சம் மக்கள் கொண்ட ஒரு சிறு கூட்டமாகிய சிக்கியச் சமுதாய ஸ்தாபனத்தை, அதுவும் இரண்டொரு மாகாணத்தில் மாத்திரம் வசிக்கும் மக்கள் ஸ்தாபனத்தை ஒரு தனிஸ்தாபனம் என்று ஏற்றுக்கொண்டு 5, 6, கோடி மக்கள் கொண்ட "பஞ்சம," தீண்டப்படாத மக்கள் ஸ்தாபனத்தையும், 4, 5 கோடி கொண்ட திராவிட ("சூத்திர") மக்கள் ஸ்தாபனத்தையும் லட்சியம் செய்யவே இல்லை என்றால் இது பொதுமக்களிடம் சுதந்திரம் ஒப்புவிக்கும் காரியமா அல்லது தங்களுக்கு இணக்கமான தங்கள் நலனுக்கு ஏற்றவர்களிடம் இரகசிய ஒப்பந்தம் பேசிக்கொண்டு சுதந்திரம் (போலி சுதந்திரம்) ஒப்புவிக்கும் சூழ்ச்சியா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டுகிறோம்.

ஏதோ எதிர்பாராத நல்ல சம்பவமாக இந்தியாவில் உண்மை இந்திய-வஞ்சிக்கப்பட்டமக்கள் நலனுக்கு மற்றொரு சமுதாயம் அதாவது முஸ்லிம் சமுதாய ஸ்தாபனம் ஒன்று இருந்துவருவதால், இந்நாட்டு மக்களுக்கு அரசியலில், மதஇயலில், பொருளாதார இயலில் ஏற்படப்போகும் ஒரு பெரிய ஆபத்து, சற்றுத் தயங்கி, தயக்கமாகிக் கொண்டு வருகிறது என்று சொல்லலாம். அப்படி அது ஒன்று (முஸ்லிம் லீக்) இன்று இல்லாதிருந்திருக்குமானால் இன்று வெளிப்படையான மனுதர்ம ஆட்சி இந்த நாட்டு மக்களுக்கு ஏற்பட்டு சில வருஷங்கள்கூட ஆகி இருக்குமென்றே சொல்லலாம்.

இப்படி இருந்தும் காங்கிரஸ்காரர்களின் அகம்பாவமும் ஆணவமும் சிறிதாவது மறைத்துக்காட்டப்படுவதாக இல்லை. வெள்ளையர் (பிரிட்டிஷார்) காங்கிரசுடன் எவ்வளவுதான் இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டாலும் உலகமெய்ப்புதலுக்குச் சற்று யோக்கியமாக நடந்துகொண்டதாகக் காட்டப்படவேண்டியதாய் இருக்கிறது என்பதுமாத்திரமல்லாமல், உலகமுஸ்லிம்களின் கோபத்திற்கு ஆளாகாமல் நடந்துகொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்திலும் இருக்கிறார்கள். ஆதலால் 4 கோடி திராவிடர்களையும் 6 கோடி ஷெட்யூல்டு வகுப்பாரையும் அலட்சியம் செய்ததுபோல் 9 கோடி முஸ்லிம்களை அலட்சியம் செய்ய முடியவில்லை. (அதுபோலவே தனிவாய் முகப்பில் சிக்கியர்கள் இருப்பதால் அவர்கள் முஸ்லிம்களுடன் சேர்ந்து கொண்டால் தங்களுக்கு (காங்கிரஸ்காரர்களுக்கு) ஆபத்து என்று கருதுவதால் சிக்கியர்களையும் அலட்சியம் செய்ய முடியவில்லை.

ஆதலால் குறைந்த அளவாவது முஸ்லிம்களைச் சரிப்படுத்திக்கொண்டுதான் சுதந்திரம் அளிக்கப்பட்டதாகச் சொல்ல வேண்டி ஏற்பட்டுவிட்டது.

முஸ்லிம்கள் நிலைமை இன்று சற்றுப் பலப்பட்டு விட்டதாலும், அவர்கள் திட்டமானது உறுதியானதும் தெளிவானதாயுமிருப்பதாலும், அந்தத்திட்டத்தின் வழியாய்த்தான் இந்திய மக்கள் யாவரும் உண்மையான பூரண சுயேச்சை அடையக் கூடுமானதாலும், பித்தலாட்ட போலிச் சுயேச்சை வாங்குவோர் கொடுப்போர் ஆகிய இரண்டுபேருக்குமே முஸ்லிம்கள் நிலை சங்கடமாக இருந்துவருகிறது.

முஸ்லிம்களை இனி ஏமாற்ற எவராலும் முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. முஸ்லிம்களிடம் பலாத்காரம் காட்டி, பயப்படுத்திப் பணியவைக்கலாமென்பது காங்கிரசின் கடைசிமார்க்கமாக ஆகிவிட்டது என்றாலும் முஸ்லிம்களிடம்காட்டும் பலாத்காரத்தினால் 9 கோடி முஸ்லிம்களில் ஒரு ½ கோடி முஸ்லிம்களைத்தான் அதிகமாய்க் கொன்றாலும் கொல்லலாமே தவிர அதற்குமேல் கொன்றுவிட யாராலும் முடியாது. ½ கோடி முஸ்லிம்களைப் பலி கொடுத்துவிடுவதால் முஸ்லிம் சமுதாயம் 20 கோடி முஸ்லிம்களுக்குண்டான பலத்தைப் பெற்று இந்தியாவை, முழுவதையும் முஸ்லிம் ராஜ்யமாக ஆக்கிவிடுமே ஒழிய இந்தியாவை விட்டு முஸ்லிம்கள் ஒழிந்துவிடுவதோ, அல்லது ஆரியருக்கு அடங்கிவிடுவது எப்போதோ கனவிலும் நடக்கக்கூடிய காரியமல்ல என்போம். அதுபோலவே ½ கோடி முஸ்லிம்கள் கொல்லப்படுவதற்கு, ½ கோடி இந்துக்களுக்கு மேல் பலியாக வேண்டும். படேல் அவர்கள் சொல்லுவதுபோல் வாளைக் கொண்டு முஸ்லிம்களை ஒழிப்பது, அடக்குவது என்கின்ற நிலை ஏற்படுமானால் ½ கோடி முஸ்லிம்கள் சாவதற்குள் குறைந்தது 5-கோடி மக்கள் முஸ்லிம்களாக ஆகிவிடுவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

## அருப்புக்கோட்டையில் சிறப்புக்கூட்டம்

1-12-46 ஞாயிறன்று காலை பெரியார் ஈ. வெ. ரா. அவர்களும் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், க. அ. மணியம்மையார் ஆகியோரும் அருப்புக்கோட்டை செல்லும் வழியில் விருதுநகர் புகைவண்டி நிலையத்தில் ஏராளமான திராவிட மக்களால் ஆரவாரத்துடன் வரவேற்கப்பட்டார்கள். திராவிட இளைஞர்கள் சார்பில் மூவருக்கும் மாலை சூட்டப்பட்டுப் பின்னர் புகைப்படமும் எடுக்கப்பட்டது. அதன்பிறகு பெரியாரும் பிறரும் அருப்புக்கோட்டை சென்றனர்.

அருப்புக்கோட்டை தாலுக்கா திராவிடர் கழகத்துணைச் செயலாளர் தோழர் சி. பெ. இரத்தினம் அவர்களின் குழந்தைக்குப் பெரியாரவர்களால் "வீரமணி" என்று பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாக "விடுதலை" "குடி அரசு" ஆகிய பத்திரிகைகளுக்கு மூன்று ரூபாய் வீதம் நன்கொடையளிக்கப்பட்டது. (வரப்பெற்றோம், நன்றி. ஆ-ர்)

அன்று மாலை 7 மணிக்கு அருப்புக்கோட்டை நாடார் பெண்கள் பள்ளிக்கு முன்பாக ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்குச் சுமார் பத்தாயிரம் மக்களுக்குமேல் வந்திருந்தனர். தோழர் எஸ். எஸ். பழனிச்சாமி அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் தொடங்கியது. முதலில் தோழியர் மணியம்மையும் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் பேசியபின் பெரியார் அவர்கள் ஒரு நீண்ட சொற்பொழிவாற்றினார்கள்.

அருப்புக்கோட்டை திராவிட இளைஞர்கள் சார்பாக 101 அணாவும், தேவாங்க மகாஜன வாலிபர் சார்பாக 101 அணாவும், விஸ்வகர்ம வாலிபர் சார்பாக 101 காலணாவும் கொண்ட பணமுடிப்புகள் பெரியாரவர்களுக்கு நன்கொடையாக அளிக்கப்பட்டன. மேலும் அருப்புக்கோட்டை முஸ்லிம் லீக் சார்பிலும், லீக் தலைவர் சார்பிலும், விஸ்வகர்ம ஆசாரிகள் தொழிலாளர் சங்கம், சாலியர் மகாஜன பிரச்சார சபை, சாலியர் பிரச்சாரப் பயிற்சிக் கழகம், ராத்துக்குடி நகர திராவிடர்கழகம் ஆகியவற்றின் சார்பிலும் பெரியாருக்கு மாலைகள் அணிவிக்கப்பட்டன.

சிறப்பாக, தென் ராமநாதபுரம் மாவட்ட கமிட்டியின் சார்பில் மத்திய திராவிடர் கழக நிதிக்காகத் திரட்டப்பட்ட 5001 ரூபாயும் பெரியார் அவர்களிடம் அளிக்கப்பட்டது.

அந்தப் பகுதிக்கு அளிக்கப்பட்டிருந்த "கோட்டா"வைவிட அதிகமான தொகையை வசூலித்து உதவிய தோழர்கள் முத்துநாடார், சண்முக சுந்தரம், கருப்பையா, சீனிப்பாண்டியன், பழனிச்சாமி ஆகியோரின் முயற்சி மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

முடியாதவற்றைச் செய்விக்க கடவுளும் மதமும் கண்டிப்பாக மனித சமுதாயத்திற்கு வேண்டி இருக்கின்றன.

முக்கியமான மற்றொரு விஷயத்தையும் சொல்லுகிறேன். அதாவது இப்போது இந்த விஞ்ஞான மேம்பாடும் அறிவும் உள்ள காலத்திலும் கூட இந்தக் கடவுள் மதத்திற்கு இவ்வளவு பிரச்சாரம் ஏன் நடைபெறுகிறது என்று நீங்கள் கேட்கலாம். சுருக்கச் சொன்னால் இப்போது தான் முன்னிலும் அதிகமாகப் பிரச்சாரம் வேண்டியதாகி விட்டது. ஏன் எனில் இயற்கைக்கு விரோதமான தனிவுடைமை உணர்ச்சியும், மனிதனுக்கு மனிதன் கீழ் மேல் தன்மையும், மனிதனை மனிதன் அடக்கி ஆளுவதும் தவறு என்கின்ற எண்ணம் ஏற்பட ஒரு கூட்டத்தாரால் பிரச்சாரம் செய்யப்படுவதோடு பொதுவுடைமையும், சமரசத் தன்மையும் சரி அதுதான் இயற்கை என்று ஏழை மக்களும், தாழ்ந்த நிலையில் உள்ள மக்களும் கருதும்படியான நிலை ஏற்பட்டு வருகிறது. இந்த நிலையை அரசன், சட்டம், தண்டனை ஆகியவைகளால் சமாளிப்பது என்பது இனி முடியாததாகவும் காணப்படுகிறது. அரசனையும், சட்டத்தையும், பிரபுக்களும் மேல்ஜாதிக்காரர்களும் சிருஷ்டித்தாலும் அரசனையும், சட்டத்தையும் பணிய வேண்டியவர்களும், பணியாதவர்களை தண்டிக்க வேண்டியவர்களும் ஏழைகளும் தாழ்ந்த நிலையில் உள்ள மக்களுமே யாவார்கள். ஆதலால் அவர்களுக்கும் "பிரபு ஏன், மேல்ஜாதிக்காரன் ஏன்" என்ற எண்ணம் தோன்றிவிட்டால் அரசன் (அரசாங்கம்) நிலைக்கமாட்டான், சட்டம் அமுல் நடைபெறாது, தண்டனை லட்சியப்படுத்தப்படமாட்டாது. ஆகவே இம்மாதிரி இயற்கைக்கு விரோதமான நிலையை உண்டாக்கவும் காப்பாற்றவும் செய்யப்பட வேண்டுமானால் அரசனும்,

---

ஆகவே வானிடம் நம்பிக்கைவைத்து முஸ்லிம்கள் இல்லாத ஆரியர் நிர்ணயசபை கூட்டப்போவதாக வீராப்புப் பேசும் அகம்பாவ பட்டேல் பேச்சுப்படி ஆரியர் நிர்ணய சபை கூட்டப்படுமானால் அது மாப்பிள்ளை இல்லாமல் செய்யப்படும் திருமணமாகத் (விபசாரித்தனத்துக்குப் பொட்டு கட்டும், முத்திரை போடும் திருமணமாகத்)தான் முடியுமே ஒழிய ஒழுக்கமான நாணயமான சம்சாரிவாழ்க்கையான அரசியல் நிர்ணயம் ஏற்பட்டுவிடாது.

காந்தியார் அஹிம்சையால் சுதந்திரம் பெறட்டும்! அவர் சிஷ்யர்கள் வாளால் சுதந்திரம் பெறட்டும்!! வெள்ளையர் (பித்தலாட்ட) சுதந்திரம் கொடுக்கட்டும்!!! மற்றவர்கள் மனிதர்களா? அல்லது ஈனப்பிறவிகளா? என்பதும் விளங்கட்டும்!

சட்டமும், தண்டனையும் என்னத்திற்காகத் தேவை? என்பதற்கும் ஒரு காரணம் வேண்டியதாக இருக்கிறது. எனவே அதற்காகவும் கடவுள் மதம் இருந்தாகவேண்டி இருக்கின்றன.

உதாரணமாகக் கடவுள் இல்லாவிட்டால் உலகில் செல்வவானும் தரித்திரவானும் இருக்க முடியவே முடியாது. அதுபோலவே மதம் இல்லாவிட்டால் மேல்மகனும் மேல் ஜாதியும், கீழ்மகனும், கீழ்ஜாதியும் சாதாரண ஆத்மாவும் மகாத்மாவும் இருக்கவே முடியாது. ஆகவே செல்வன் வறிஞன், மேல்மகன், மகான் ஆகியவர்கள் காப்பாற்றப்பட கடவுளும் மதமும் அவசியம் வேண்டும் என்பதோடு கடவுள் மதம் இருந்தால்தான் அரசனுடைய ஆட்சியும் தண்டனையும் நடைபெற வசதி இருக்கமுடியும், கடவுள் மத விஷயத்தில் மக்களை நம்பச்செய்து விட்டால் அரசனால் கட்டுப்படுத்த முடியாத விஷயங்களைக் கடவுள் கட்டுப்படுத்துவார், சட்டத்தால் திருத்தமுடியாத காரியங்களை மதம் திருத்தும்.

பொருள் [illegible] மன்னர் [illegible] காரியங்கள் எங்கெங்கு காணப்படுகின்றனவோ எங்கெங்கு தேவைப்படுகின்றனவோ அங்கெல்லாம் கடவுளும் மதமும் தேவையே யாகும். அதனாலேயே இயற்கைக்கு மாறுபட்ட தன்மையில் மக்கள் வாழவேண்டியது சமுதாய வாழ்வுக்கு அவசியமானது என்று கண்டறிந்த பெரியார்கள் கடவுளைக் கற்பிக்கவும், மதத்தை உண்டாக்குவதுமான காரியங்களில் ஈடுபட்டு வேலைசெய்திருக்கிறார்கள்.

செல்வனும் அரசனும், மேல்மகனும் கீழ்மகனும் வேண்டாம் என்றால் அல்லது இல்லாமல் செய்யப்பட்டு விட்டால் (போய்விட்டால்) கடவுளும் மதமும் தேய்ந்து மறைந்து போகும் தன்மையை அடைந்து விடும். ஆகவே நல்ல எண்ணத்தோடு ஆஸ்திக தர்மத்தோடு ஆராய்ந்து பார்த்தாலும் கடவுளுக்கும் மதத்துக்கும் தத்துவவிளக்கத்தில் இவ்வளவு இடம்தான் இப்போது கிடைக்கிறது என்பேன்.

[இனி மனித அமைப்பு, ஆத்மா என்பவைபற்றிப் பேசியவை பின்னால் வரும்.]

---

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளைக்காரர்கள் முதலான இப்படிப்பட்ட ஆளுகள்தான் விற்கிறார்கள். இதுயாருக்கும் தெரியாதா நம்ம பாப்பாருக்கும், காங்கரஸ் கூலிக்கும் கொள்ளை அடிக்கிறதுக்கு ஒரு வழியின்னுதானே இந்த ஏற்பாடு பண்ணினது? எங்கூட வா, கதர் போட்டிருக்கிறவன் வூட்டிலே சாராயக் குப்பி அரிசி துணிமூட்டை இதெல்லாம் வண்டிக்கணக்கிலேகாட்டுறேன் இப்படியெல்லாம் இல்லாமலா காங்கரஸ் ஆளுகளைப்பார்த்தா மனவிலே புடிங்கின கெழங்காட்டமா கொட்டாப்புளி மாயனாட்டமா இருக்கிறாங்கோ. பட்டிக்காட்டுக் காங்கரஸ்காரனுங்கோ என்ன பிளாக் மார்க்கட் கொள்ளை அடிக்கிறாங்கோ உனக்குத் தெரியுமா? நடக்கட்டும். தோசையைத் திருப்பிப்போட நாள் தூரத்திலே இல்லை. எங்க வயிறு எரியறாப்பலே அவுங்க வூட்டுக்கு முன்னாலே கொள்ளிக்கட்டை எரியப்போகுது. எங்களுக்கு இதெல்லாம் ஒரு திருவிளையாடல்தான். [illegible] ஏழைகள் ராஜ்யம் என்பது [illegible] பொய்யாபி, கொள்ளைக் காரர்கள் [illegible] கேடிகள் ராஜ்யம் என்பது சரியான மெய்யாக ஆயிட்டது. அது சீக்கிரத்திலே ஏழைகள் இராஜ்யமாக ஆகாவிட்டாலும், சாதாரண நடுத்தர மக்கள் ராஜ்யமாகவாவது ஆய்த்தீரும். அப்போ இந்த ஆளுகள் அந்த ராஜ்யத்துக்கும் விண்ணப்பம் போடுவாங்க பார்த்துக்கலாம் போவிட்டுவா.

## மதிப்புரை

### "பாகிஸ்தான் பகற்கனவா?"

"பாக்கீஸ்தான்பகற்கனவா?" என்ற நூல் கையாப்பெற்றோம். அதன் ஆசிரியர் சென்னை தமிழ் முஸ்லிம் சங்கத் தலைவரும், அதிராம்பட்டணம் தோழருமான க. மு. முஹம்மத் ஹனீப் அவர்கள் ஆவர். இந்தியாவில் பலவகைப்பட்ட குழப்பங்களும், சிக்கல்களும் ஏற்படுவதற்குக் காரணம் இந்தியா ஒரே தேசம் என்று கருதப்படுவதுதான். இந்தியா பல நாடுகளும், பல சமுதாயத்தினரும் அடங்கிய ஓர் துணைக்கண்டம் என்ற உண்மையை இந்தியாவிலுள்ள ஒவ்வொருவரும் உணர்ந்திடின் குழப்பங்களும், சிக்கல்களும் ஒழிந்து முழு அமைதி இந்தியாவில் நிலையுறும் என்பது திண்ணம். இதைக் குறிக்கோளாகக்கொண்டு தான் முஸ்லிம்கள் தங்கள் நலன், கலை, வாழ்வு, நாகரிகம் முதலியவற்றைச் செம்மைப்படுத்திக் கொள்வதற்காகவே தங்களுக்கென தனியே ஓர் நாடு வேண்டுகின்றனர். அதைத்தான் அவர்கள் பாக்கிஸ்தான் என்கின்றனர். தோழர் க. மு. முஹம்மத் ஹனீப் அவர்கள் பாக்கிஸ்தான் பிரிந்துவிட்டால் முஸ்லிம் மக்களும், ஏனையோரும் எவ்வகையில் நலம் பெறுவர் என்பதை நன்கு விளக்கிக் காட்டுகின்றார், "பாக்கிஸ்தான் பகற்கனவா?" என்ற நூலில். பாக்கிஸ்தான் திட்டம் விளக்கமான முறையில் தீட்டப்பட்டிருக்கும் இந்நூல் ஒவ்வொரு முஸ்லிமும், பாக்கிஸ்தான் திட்டம் போன்ற திட்டமாகிய திராவிடநாடு பிரிவினைத் திட்டத்தை யுடைய ஒவ்வொரு திராவிடனும் படித்துப் பயன்பெறற்குரியது.

இதன் விலை 6-அணாதான்.

கிடைக்குமிடம்:—மாணவர் பதிப்பகம், முத்துமாரிசெட்டித்தெரு, மண்ணடி, ஜி. டி. சென்னை.

---


## காலண்டர்கள்

வெளிவந்துவிட்டன

திராவிடர் திலகம், அறிவின் அம்சம், புரட்சியின் சிகரம், நம் திராவிடத் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் திராவிடநாட்டின்மீது தன் கைக்கோலை ஊன்றிக்கொண்டு கம்பீரமுடன் நின்றுகொண்டிருக்கின்றார்கள். காலண்டர் மிக அழகாக அச்சிடப்பட்டுள்ளது.

ஒன்றின் விலை 0-8-0

வியாபாரிகட்கு தக்கலாபம் தரப்படும்.

விபரங்கட்கு:-

திராவிடன் பதிப்பகம்,
P. B. 18 வேலூர் (N.A.)

இலங்கையில் காலண்டர்கள் கிடைக்குமிடம்:-

Dravida Nool Nilayam,
147 Havelock road,
Colombo.


---

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilian Press, 42, Cutcherystreet, ERODE.